**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**
**<u>District Munsif, Arni.</u>**
**<u>O.S.51/2015</u>**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 சதாசிவம், வயது 56 , த/பெ வரதராஜன்**

**நேரம் - 11.50**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தாவா சொத்தில் பிரதிவாதிகள் புதியதாக கட்டிடம் கட்டவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்குரை பத்தி 6ல் பிரதிவாதிகள் சட்டத்திற்கு முரணாக ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை இடித்து காலி இடத்தை எனக்கு தருமாறு வழக்கறிஞர் மூலம் 23.05.2015 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதுப்போல் பிரதிவாதிகள் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கறிஞர் மூலம் பொய்யான சங்கதிகளை கொண்டு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. பிரதிவாதி என் உடன் பிறந்த அண்ணன் என்பதாலும், அவருக்கும் எனக்கும் முன் விரோதம் உள்ள காரணத்தால் பொய்யான சங்கதிகளை கொண்டு அவர் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்த பின்னர் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து அவர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். எந்த தேதியில் பார்வையிட்டார் என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. 07.12.2015 அன்று பார்வையிட்டார் என்றால் அளந்தார்கள் ஆனால் தேதி எனக்கு நினைவில்லை.

3. அப்போது நான் மற்றும் என் வழக்கறிஞர் உடன் இருந்தோம் என்றால் சரிதான், எல்லோரும் இருந்தார்கள். அப்போது அவர்கள் 5, 6 வீடுகள் தள்ளிதான் சரியான அளவில்தான் அளவெடுத்து தாவா சொத்தை அளந்தார்கள் என்றால் கிழக்கிலிருந்து அளந்தார்கள். மேற்கிலிருந்து அளந்தார்களா என்றால் கிழக்கிலிருந்து அளந்தார்கள். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை பத்தி 2ல், கடைசி 3 வரிகளில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அளவீடு செய்யும் போது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் வரை சரியாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் குறை உள்ளது.

3. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை 3ம் பத்தியில் பிரதிவாதிகள் மேற்கில் பழனி என்பவர் வீடும், பழனி என்பவர் இடத்திற்கு மேற்கில் காசிபிள்ளை என்பவர் இடமும் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கறிஞர் வரைபடத்தில் கிழக்கில்தான் எனக்கு 4 அடி குறைவாக உள்ளது என்றாலும், மேற்கு பக்கத்தில் இல்லை என்றால் சரியல்ல, மேற்கில்தான் உள்ளது. மேற்படி ஆணையர் அறிக்கைக்கு நான் ஏதேனும் ஆட்சேபணை செய்தேனா என்றால் இல்லை.

4. ஆகையால், வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைப்படி 4 அடி குறைவாக உள்ளது என்று பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேப்போல் 12.12.1983 அன்று என் தந்தை எழுதி வைத்த ஆவணப்படி பிரதிவாதிகள் அளவீடு சரியாக உள்ளது என்றால் சரியல்ல. அதேப்போல் என் அக்காக்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் அளவுகள் படி 2ம் பிரதிவாதியான என் அண்ணிக்கு எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். அதேப் போல் பிரதிவாதிகள் சரியான அளவில்தான் சரியாக பிரதிபலனுக்கு அவர்கள் இடத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் அவர்கள் மீது பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என் சகோதரர் மீது நான் வன்மம் கொண்டு அவரை நீதிமன்றத்திற்கு வரவழைத்து அலைய வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**
**நேரம் - 12.20**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni